
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1043**

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

**150**

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...




# களம் நமதே!

## விளையாட்டுத் துறையின் பொற்காலம்!



தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையின் பொற்காலமாகத் திகழ்கிறது கடந்த நான்கு ஆண்டு திராவிட மாடல் ஆட்சி. முன்னெப் போதையும்விடவும், இந்தியாவில் வேறெந்த மாநிலத்தைவிடவும் விளையாட்டுத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளது தமிழ் நாடு அரசு. விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்கு எனக் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 2,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறது அரசு.

தமிழ்நாட்டில் இருந்து சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றுவரும் விளையாட்டு வீரர்களுக்கு, 'உயரிய ஊக்கத் தொகை', 'சிறப்பு உதவித் தொகை' எனப் பல பெயர்களில் ஊக்கத் தொகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவில் மினி ஸ்டேடியம், ஊராட்சிதோறும் 'ஸ்போர்ட்ஸ் கிட்' என விளையாட்டுத் துறை ஊக்கமடைந்து வருகிறது.

இந்தத் திறமையாளர்களை எல்லாம் கண்டறியும் இடமாக, கடந்த நான்கு ஆண்டுகளில் அமைந்துள்ள மிகப் பெரிய விளையாட்டுத் திருவிழாதான் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்.

### 16 லட்சம் போட்டியாளர்கள்

தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் (SDAT) இணைந்து நடத்தும், இந்த மாபெரும் போட்டிகளில் பங்கேற்பதற்கு, கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு வீரர்களிடையே அதிக ஆர்வம் நிலவியது. இதுவரைக்கும் இல்லாத அளவில் அதிக பேர் கலந்துகொண்ட போட்டியாக இந்த ஆண்டு நடத்தப்பட்ட 'களம் நமதே' போட்டிகள் அமைந்தன.

ஆகஸ்ட் மாதம் போட்டிக்கான இணையவழி முன்பதிவு அறிவிக்கப்பட்டபோது, 16,28,338 பேர் பங்கேற்க விண்ணப்பித்திருந்தனர். பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், மாற்றுத் திறனாளிகள், அரசு ஊழியர்கள் என, இவர்கள் ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டனர்.

தடகளம், கால்பந்து, பளு தூக்குதல், டென்னிஸ், கூடைப்பந்து உட்பட மொத்தம் 38 தனிநபர், குழு விளையாட்டுப் போட்டிகளில் மாவட்ட, மண்டல அளவில் எல்லாம் கடந்து, 32,000-க்கும் மேற்பட்ட வீரர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டனர். செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் போட்டிகளைத் தொடங்கிவைத்தார்.

இவர்களில், தனிநபர் பிரிவில் முதல் மூன்று இடங்கள் பிடித்த வெற்றியாளர்களுக்கு, 1 லட்சம் ரூபாய், 75,000 ரூபாய், 50,000 ரூபாயும் பரிசாக அளிக்கப்பட்டன. அணி சார்பாகக் கலந்துகொண்ட வர்கள் எல்லோருக்கும் 75,000 ரூபாய், 50,000 ரூபாய், 25,000 ரூபாயும் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல், கல்வி உதவித்தொகைகள், அங்கீகாரம் மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல நன்மைகளையும் வழங்குகிறது முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்.

### மின்னணு தகவல்கள்

அனைத்துப் போட்டிகளும், தகவல்களும் 'கேம்ஸ் மேனேஜ்மென்ட் சிஸ்டம்' (Games Management System) மூலமாக வெளிப் படைத் தன்மையுடன் நடத்தப்பட்டன. குறிப்பாக, போட்டி விவரங்கள், பதக்க நிலை, வெற்றியாளர்கள் பட்டியல், மதிப்பெண், வீரர் விவரங்கள் உள்ளிட்ட அனைத்தும் tncmotrophy.sdat.in என்கிற அதிகாரபூர்வ இணையதளப் பக்கம் வழியாக, உடனுக்குடன் துல்லியமான பதிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டன. அத்துடன் முதல்முறையாக அனைத்து 'அப்டேட்'களையும், முடிவுகளையும் உடனுக்குடன் தெரிந்துகொள்ள 'Whatsapp ChatBot' என்கிற வசதியும் நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்த நவீன முயற்சிகள் மூலம் விளையாட்டுப் போட்டிகளில் முழுமையான 'டிஜிட்டல்' முறையைக் கடைப்பிடித்து முன்னோடியாகத் திகழ்கிறது தமிழ்நாடு.



### வெற்றிக் கோப்பை

37 வகை விளையாட்டுப் பிரிவுகளில், 196 போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டு, 109 தங்கப்பதக்கம் வென்ற சென்னை மாவட்டம் முதலிடத்தையும், 36 தங்கப்பதக்கம் வென்ற செங்கல்பட்டு மாவட்டம் இரண்டாம் இடத்தை யும், 33 தங்கப்பதக்கம் வென்ற கோவை மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

14.10.2025 அன்று வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகளை வழங்கி வாழ்த்தினார் நம் முதலமைச்சர் அவர்கள். அங்கு அவர் பேசுகையில், "திராவிட மாடல் அரசின் கடந்த நான்கு ஆண்டு சாதனைப் பயணம் விளையாட்டுத் துறையிலும் எதிரொலிக்கிறது என்பதன் அடையாளமாக முதலமைச்சர் கோப்பை போட்டிகள் அமைந்துள்ளன" எனக் குறிப்பிட்டார். "திறமையாளர்கள் எங்கு இருந்தாலும் அடையாளம் கண்டு, அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று நினைக்கிறோம். இந்தப் போட்டிகளின் நோக்கம் அதுதான்" என்றும் திராவிட மாடல் அரசின் இலக்கை தெளிவுபடுத்தினார்.





> **109 தங்கப்பதக்கம் வென்று சென்னை முதலிடத்தையும், 36 தங்கப்பதக்கம் வென்று செங்கல்பட்டு இரண்டாம் இடத்தையும், 33 தங்கப்பதக்கம் வென்று கோவை மூன்றாம் இடத்தையும் பிடித்தன.**

தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையை வாழ்க்கையாக எடுத்தால், நிச்சயம் சாதிக்க முடியும் என்று அரசின் திட்டங்கள் மீதும் முன்னெடுப்புகள் மீதும் நம்பிக்கை வைத்து கலந்துகொண்டவர்கள் வெற்றி பெற்று கோப்பை பெற்றனர். அதேபோல, இந்த 16 லட்சம் வீரர்களின் நம்பிக்கை, திராவிட மாடல் அரசுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றிக் கோப்பை என்றால் மிகையில்லை.

**...சாதனை தொடரும்**

## வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசு!

இந்திய விமான சேவைத் துறையில் சரிபாதிக்கும் மேல் விமான சேவைகளை வழங்கிவரும் இன்டிகோ விமான நிறுவனம் தனது சேவைகளை, எந்த விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் நிறுத்தியதால், விமானப் பயணத்திற்குக் கடும் நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்தியாவில் முன்னணி விமான சேவை நிறுவனத்தின் இந்த நடவடிக்கை காரணமாக, மற்ற விமான நிறுவனங்கள் அதிக விலைக்கு டிக்கெட்டுகளை விற்றுக்கொண்டு இருக்கின்றன.

நான்காயிரம், ஐந்தாயிரம் என்று இருக்கக்கூடிய கட்டணங்களை 50 ஆயிரம், ஒரு லட்சம் என்று வசூல் செய்து கொண்டிருப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு.

சாதாரண நேரங்களில் டெல்லி - மும்பை, டெல்லி - பெங்களூரு வழித்தடங்களின் கட்டணங்கள் 10 ஆயிரம் ரூபாய்க்குள் இருக்கும். அவை தற்போது, 50 ஆயிரம், ஒரு லட்ச ரூபாயாக உள்ளது.

ஏர் இந்தியாவை தனியாரிடம் விற்று விட்டு அரசு விமான சேவையில் இருந்து கைகழுவியதன் விளைவு தான் தலைநகர் டெல்லி தொடங்கி சென்னை விமான நிலையம் வரை நாட்டின் அனைத்து விமான நிலையங்களும் அல்லோலப்பட்டது.

பாகிஸ்தான் மீது துல்லிய தாக்குதல் நடத்துவதாகச் சொல்லும் மோடி அரசு, தன் கண் எதிரே நடக்கும் பகல் கொள்ளையைக் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



## தலைவர் இல்லத்தில் மணவிழா வாழ்த்து!



டி.ஏ.துரைசாமி

2015-ஆம் ஆண்டில், ஒன்றுபட்ட சேலம் மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளராக கழகப் பணியாற்றி வந்தபோது, என் மூத்த மகள் பூங்கோதை - ராதாகிருஷ்ணன் திருமணம் நடைபெற்றது. மணவிழா முடிந்து இரண்டு நாள்களில், தற்போது சுற்றுலாத் துறை அமைச்சராக உள்ள அண்ணன் ஆர்.ராஜேந்திரன் அவர்களின் ஏற்பாட்டில், இன்றைய கழகத் தலைவரின் இல்லம் சென்று மகளும்-மருமகனும் வாழ்த்து பெற்றனர். 1980-ஆம் ஆண்டில், பனைமரத்துப்பட்டி ஒன்றிய துணைச் செயலாளராகவும்,

2006-ஆம் ஆண்டில் திப்பம்பட்டி ஊராட்சித் தலைவராகவும் கழகப் பணியாற்றினேன். இன்று, 70 வயதிலும் எனது கழகப் பணிக்கு ஓய்வில்லை.

**- டி.ஏ.துரைசாமி,**
**திப்பம்பட்டி,**
**மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர்,**
**சேலம் கிழக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அறைகூவல் விடுத்த கலைஞர்!

1963 ஜூன் மாதம், இந்தி திணிப்புக்கு எதிராக நேரடி போராட்ட அறைகூவல் விடுத்த பொதுக்கூட்டத்தில், போராட்டக் குழுத் தலைவர் கலைஞர் உரையாற்றினார். "கஷ்ட நஷ்டங்களை ஏற்று சமாளிக்கும் துணிவும், தேவையானால் எதற்கும் தயாரான பக்குவத்தினைப் பெற்று, என்னோடு போராட்டக் களத்தில் இந்தியை எதிர்த்துப் போரிடுவதற்குத் தயாரான தோழர்களை அழைக்கிறேன்" என அறைகூவல் விடுத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131